**DVC.NO. 1/2023 RW-1**

நாள் : 19.05.2025

பெயர் : சலீம்

த/பெ : அலி உசேன்

**புகார்தாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

இவ்வழக்கின் 1 ம் எதிர்மனுதாரர் மனுதாரரின் கணவர் ஆவார் என்றால் சரிதான். மனுதாரர் இவ்வழக்கை எதற்காக தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். இவ்வழக்கில் 1 ம் எதிர்மனுதாரர் தான் பதிலுரை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். நீங்கள் 2 ம் எதிர்மனுதாரர் என்ற முறையில் இவ்வழக்கில் பதிலுரை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 1 ம் எதிர்மனுதார் தாக்கல் செய்துள்ள பதிலுரையில் என்ன தகவல் இருந்தது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். 1 ம் எதிர்மனுதாரர் நல்ல சுயநினைவுடன் தான் பதிலுரை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். எனது மகனான 1 ம் எதிர்மனுதாரர் பதிலுரையில் தனக்கு மனநிலை சரியில்லை என்று எதுவும் குறிப்பிடவில்லை என்றால் கூறப்பட்டுள்ளது. எனது மகன் நல்ல மனநிலையில் தான் இருந்தால் ஆனால் அவரது மனைவி, பிள்ளைகள் அவரை விட்டு பிரிந்து சென்ற பிறகு சில நேரங்களில் மனநலம் மாறி செயல்படுகிறார்.

எனது மூத்த மகன் காவல் துறையில் பணி செய்து வருகிறார் என்றால் சரிதான். என் மூத்த மகன் தனியாக தான் வசித்து வருகிறாரா என்றால் ஆமாம். இன்றைய காலகட்டத்தில் ஒரு நபரின் வாழ்வாதாரத்திற்கு குறைந்தது ரூ.5000/– தேவைப்படும் என்றால் சரிதான். அதேபோல் சிறுபிள்ளைகளுக்கு கூட ஒரு மாத்திற்கு ரூ.4000/– செலவாகும் என்றால் சரிதான். 2021 ம் வருடத்தில் இருந்து 1 ம் எதிர்மனுதாரரோ, நானோ அல்லது மற்ற குடும்ப உறுப்பினர்களோ மனுதாரர் மற்றும் அவரது குழந்தைகளுக்கு

எந்த ஒரு பராமரிப்பும் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது மகன் மூலமாக பணம் அல்லது துணி, மணிகள் கொடுத்து அனுப்பினால் கூட அவரை துரத்தி அடித்துவிடுகிறார்கள். குழந்தைகளை பார்க்கவும் அனுமதிப்பதில்லை. எனது மகனை அடித்து துரத்தியதாக கூறுகிறேன் அதற்கு காவல் நிலைத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. இதுநாள் வரையில் மனுதாரர் மற்றும் அவரது பிள்ளைகளுக்கு எந்த பராமரிப்பும் நாங்கள் செய்யவில்லை என்றால் அவர்கள் எங்களை செய்யவிடுவதில்லை.

1 ம் எதிர்மனுதாரின் மூலமாக பிறந்த எனது பேரன், பேத்தி பெயர் தெரியுமா என்றால் தெரியும். அதை கூற முடியுமா என்றால் பேரன் பெயர் வாகித், பேத்தி பெயர் நாங்கள் எங்கள் சமுதாயத்தின் படி ஷாகினா என்று பெயர் சூட்டினோம், ஆனால் மனுதாரர் அதை வேண்டாம் என்று சொல்லி வேறு பெயர் வைத்துள்ளார் அதை எங்களுக்கு கூறவில்லை அதனால் தெரியாது. 1 ம் எதிர்மனுதாரரின் மகனான என் பேரன் என் வீட்டில் தான் பிறந்தார் என்றால் ஆமாம். ஆனால் பேத்தி எங்கள் வீட்டில் இருந்த போது பிறக்கவில்லை என்றால் சரிதான். மனுதாரரின் மகன் மற்றும் மகளுக்கு 1 ம் எதிர்மனுதாரர் தகப்பானர் என்ற முறையிலும் நான் தாத்தா என்ற முறையிலும் செய்ய வேண்டி கடமைகள் உள்ளது என்றால் ஆமாம். மனுதார் மற்றும் 1 ம் எதிர்மனுதார் நிச்சியதார்த்தம் ஒரு திருமண மண்டப்பத்தில் தான் நடைபெற்றது என்றால் சரிதான். மனுதாரருக்கு தகப்பனார் இல்லை என்றால் ஆமாம்.

திருமணத்தின் போது மனுதாரருக்கும், 1 ம் எதிர்மனுதாரருக்கும் மனுதாரரின் குடும்பத்தார் 5 1/2 சவரண் நகை கொடுத்தார்கள் என்றால் நான் எந்த வரதட்சனையும் வேண்டாம் என்று கூறினேன் அவர்கள் என்ன அளித்தார்கள் என்று எனக்கு தெரியாது. எனது மூத்த மகன் காவல் துறையில் வேலை செய்வதால் அவரது தகுதிக்கு ஏற்றவாறு நிச்சியதார்த்தமும்,

திருமணமும் செய்ய வேண்டும் என்று நான் வலிவுறுத்தினேனா என்றால் சரியல்ல. அவரது இஷ்டம் என்று கூறினேன். திருமணத்தின் போது மனுதாரருக்கு அளித்த சீதான பொருட்கள் எனது வீட்டில் தான் உள்ளது என்றால் சரிதான். இது நாள் வரை அந்த பொருட்களை நான் அவர்களிடம் திருப்பி கொடுக்கவில்லை என்றால் சரிதான். ஆனால் அவர்களிடம் அவர்களே வந்து எடுத்துகொள்ளாலம் என்று கூறினேன் ஆனால் யாரும் வந்து எடுத்து செல்லவில்லை. மனுதாரரின் நகைகளை நாங்கள் அவருக்கு திருப்பி கொடுக்கவில்லை என்றால் நகைகளை மனுதாரரே பயன்படுத்தி வந்ததால் எங்களிடம் அந்த நகைகள் இல்லை.

மனுதாரருக்கு அசையும் சொத்து மற்றும் அசையா சொத்துகள் உள்ளதா என்பதை குறித்து எங்கள் பதிலுரையில் நாங்கள் குறிப்பிட்டுள்ளோமா என்றால் இல்லை ஆனால் அவர்களுக்கு சொத்துக்கள் உள்ளது. சொத்துக்கள் உள்ளது என்பதற்கு நீதிமன்றத்தில் ஆதாரம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மனுதாரருக்கு வருமானம் உள்ளது என்பதற்கு நீதிமன்றத்தில் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ஆனால் அவர் எனது மகனிடமிருந்து பிரிந்து சென்ற பிறகு வேலைக்கு சென்றிருந்தார். அதற்கு ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. 1 ம் எதிர்மனுதார் மனநிலை பாதிக்கப்பட்டவர் என்று கூறுகிறேன் அதற்கு மருத்துவ ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் மனநிலை மருத்துவர் யாரையும் பார்க்கவில்லை இந்த பிரச்சனையின் காரணமாக அவர் மன உளைச்சலில் உள்ளார். குடும்ப மருத்துவரிடம் அவ்வப்போது ஆலோசனை பெற்று மாத்திரை எடுத்துக்கொள்வார். ஆனால் 1 ம் எதிர்மனுதார் வேலைக்கு செல்கிறார் நன்றாக தான் உள்ளார். சில நேரங்களில் மனஉளைச்சல் காரணமாக சற்று முரணாக நடந்து கொள்வார் மற்றபடி நன்றாக தான் உள்ளார்.

1 ம் எதிர்மனுதாரரை ஏன் இவ்வழக்கில் சாட்சியாக இவ்வழக்கில் விசாரணை செய்யப்படவில்லை என்பதற்கு நான் எந்த காரணமும் எனது சாட்சியத்தில் கூறவில்லை என்றால் சரிதான். 1 ம் எதிர்மனுதார் வழக்கறிஞரை வைத்து வக்கலாத்தில் கையொப்பம் செய்து நீதிமன்றத்தில் உரிய எதிரூரையை தாக்கல் செய்துள்ளார் என்றாலும் அவர் நல்ல மனநிலையில் தான் உள்ளார் என்றாலும் சரிதான். 1 ம் எதிர்மனுதாரர் மனுதாரரை சேர்ந்து வாழ அழைத்து வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினாரா அல்லது நீதிமன்றத்தில் எதாவது வழக்கு தாக்கல் செய்துள்ளாரா என்றால் இல்லை. பலமுறை வாய்மொழியாக அழைத்தோம். மனுதாரரின் நகை மற்றும் சீதனப்பொருட்களை நாங்களே வைத்துக்கொண்டு அவரை வீட்டை விட்டு துரத்திவிட்டோம் என்றால் சரியல்ல. இதுவரை 1 ம் எதிர்மனுதாரரோ அல்லது எனது குடும்பத்தாரோ, நானோ மனுதாரரை சேர்ந்து வாழ வீட்டிற்கு அழைக்கவில்லை என்றால் சரியல்ல.

மனுதாரர் அவரது மகன் மற்றும் மகளுக்கு பள்ளிகூட கட்டணம் மற்றம் பேருந்து கட்டணம் என்று வருடம் ரூ.80,000/- கட்டியுள்ளார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. எங்கள் வீட்டிற்கு நாங்கள் அழைக்கிறோம் ஆனால் அவர் வரவில்லை. நாங்கள் குழந்தைகளின் பள்ளி படிப்பிற்காக எந்த நிதியுதவியும் மனுதாரருக்கு வழங்க முன்வரவில்லை என்றால் சரியல்ல. பலமுறை அவரை அனுக முயற்சி செய்தோம் ஆனால் அவர் அனுமதிக்கவில்லை. பலமுறை மனுதாரரை நாங்களாகவும் ஊர் பெரியவர்களை வைத்தும் வாழ அழைத்தோம் என்று தற்போது கூறுகிறேன் ஆனால் அதை எங்கள் பதிலுரையில் கூறவில்லை என்றால் சரியல்ல. இதுநாள் வரை மனுதாரர் கடன் பெற்று தான் பிள்ளைகளுக்கு பள்ளி கட்டணம், பேருந்து கட்டணம் மற்றும் பராமரிப்பு செலவுகள் செய்து வருகிறார் என்றால் எனக்கு தெரியாது.

நானும், 1 ம் எதிர்மனுதாரரும், எனது மற்ற குடும்பத்தாரும் மனுதாரர் மற்றும் அவரது பிள்ளைகளை அழைத்து அன்பாக பேசியதில்லை என்றாலும் அவர்களது பராமரிப்பு செலவிற்கு பணம் கொடுத்து உதவியதில்லை என்றாலும் சரியல்ல. மனுதாரரின் பிள்ளைகளுக்கும், மனுதாரருக்கும் பராமரிப்பு செய்வதற்கு நாங்கள் கடமைப்பட்டுள்ளோம் என்றால் சரிதான் எங்கள் வீட்டில் வந்து வாழ வந்தால் நாங்கள் அவர்களுக்கு எல்லா பரமாரிப்பு செலவும் செய்ய தயாராக உள்ளோம்.

ஜாமாத்தில் மனுதாரருக்கும், 1 ம் எதிர்மனுதாரருக்கும் சமரசம் செய்ய முற்பட்டபோது நான் நடந்து கொண்ட விதத்தை பார்த்து எனது வீட்டில் மனுதாரர் வாழ பாதுகாப்பு இல்லை என்று ஜாமாத்தில் கூறி அவரை நீதிமன்றத்தில் பாரத்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தினார்கள் என்றால் சரியல்ல. ஜாமாத்தில் எனக்கு தெரிந்து எந்த பேச்சு வார்த்தையும் நடக்கவில்லை. ஜாமாத்தில் பலமுறை 1 ம் எதிர்மனுதாரரையும் எங்களையும் சமரசம் பேச அழைத்தார்கள் என்றாலும் நாங்கள் அவர்களையும் திட்டி அனுப்பிவிட்டோம் என்றாலும் சரியல்ல. எந்த ஜாமாத்தில் எப்போது அழைத்தார்கள் என்பதே எனக்கு விவரம் இல்லை. எந்த ஜாமத்திலிருந்தும் எங்களுக்கு அழைப்பும் வரவில்லை.

நான் இராணிப்பேட்டை ஜாமாத்து மூலமாக மனுதாரரை அவரது வீட்டிற்கு சென்று அழைத்தேன் என்றாலும் ஜமத்தில் இருந்து வந்தவர்கள் பேச்சுவார்த்தை நடத்தினார்கள் என்றாலும் பிறகு மசூதிக்கும் மனுதாரரை பேச்சு வார்த்தைக்காக அழைக்கப்பட்டார் என்றாலும் அதற்கு அவர் வந்திருந்த போது 5 வருடங்களாக பிரிந்து வாழந்துள்ளார்கள் இதற்கு மேல் என்ன சேர்ந்து வாழ வேண்டும் என்று ஜமத்தினர்களை நானே திட்டி அனுப்பிவிட்டேன் என்றாலும் சரியல்ல. மனுவில் கூறியவாறு மனுதாரருக்கும் எனது பேரபிள்ளைகளுக்கும் பராமரிப்பு வழங்க நாங்கள்

**கடமைப்பட்டுள்ளோம் என்றால் அவர்கள் எங்கள் வீட்டிற்கு வந்தால் அனைத்து பராமரிப்பும் அளிக்க தயராக உள்ளோம்.**

Typewritten to my dictation in open Court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by witness to be corrected.

Sd/- ********

District Munsif cum Judicial Magistrate,

Ranipet.